D E P O S I T I O N OF W I T N E S S

(Chapter XXIII Code of Criminal Procedure.)

IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE,

PALLAVARAM.

Case No. CC.No. 736/2023

C.C.Old No.192/2018

PW.7

| | |
|---|---|
| Name | : Tr. Perumal |
| Father/Husband Name | :Ramasamy |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of Act 1873 of the day of 14.03.2024.

**முதல் விசாரணை**

நான் தமிழ்நாடு காவல் துறையில் பணியாற்றி ஓய்வு பெற்றுள்ளேன். கடந்த 11.12.2017 ம் தேதி நான் குரோம்பேட்டை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றிய போது மல்லிகா என்பவர் அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சையில் இருப்பதாக மருத்துவமனையில் இருந்து வந்த செய்தி மூலமாக மருத்துவமனைக்கு சென்று மல்லிகா என்பவரிடமிருந்து புகார் வாக்குமூலம் பெற்றேன். **அந்த புகார் அசாஆ6 ஆகும்.** இதன் அடிப்படையில் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 1155/2017 பிரிவுகள் 294(பி),323,506(1) கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். அந்த முதல் தகவல் அறிக்கை அசாஆ7 ஆகும். பின்னர் சம்பவ சாட்சிகளான மகாலட்சுமி, பத்மினி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் பிரதாப், பிரகாஷ் முன்னிலையில் பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். அவை முறையே அசாஆ 8 மற்றும் 9 ஆகும். பின்னர் அசா1 க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுப்புராஜ் மற்றும் குடியரசு ஆகியோர்களை வாக்குமூலம் பதிவு செய்தேன். எதிரிகளை 11.12.2017 ம் அன்று மாலை 6.30 மணியளவில் துர்க்கா நகர் மின் அலுவலகத்திற்கு அருகே எதிரிகளை கைது செய்து உரிய வழி காவல் மூலம் நீதிமன்த்திற்கு உட்படுத்தினேன். பின்பு இவ்வழக்கின் விசாரணை முடித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை.**

அசா1யிடம் மருத்துவமனைக்கு சென்று புகார் வாக்குமூலம் நான் தான் பெற்றேன். அவற்றை பெற்று முதல் தகவல் அறிக்கை நான் தான் பதிவு செய்தேன். வழக்கின் இறுதியறிக்கையை நான் தான்

தாக்கல் செய்தேன். வழக்கின் இறுதியறிக்கையை 17.01.2018 யில் தயார் செய்துள்ளேன். இறுதியறிக்கையை 7 மாதம் காலதாமதமாக 11.08.2018 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம் அவ்வாறு தான் உள்ளது. சாட்சி 1 முதல் 5 வரையிலான பட்டியல் சாட்சிகளை எந்த தேதியில் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன் என்றால் 11.12.2017 அன்று விசாரித்தேன்.

மருத்துவர்களான சாட்சி 6 மற்றும் 7 எந்த தேதியில் விசாரித்து வாக்கும்லம் பதிவு செய்தேன் என்றால் கோப்புகளில் தேதி இல்லை. பட்டியல் சாட்சிகளான 1 முதல் 7 முதல் வாக்குமூலத்தை பதிவு செய்து தான் நீதிமன்றத்தில் இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் ஆம். வழக்கின் ஆவணங்களை காலதாமதமாக நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதால் வழக்கில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அசா1 தனது முதல் விசாரணையில் ஐயப்பன் என்பவர் தனது மார்பில் எட்டி உதைத்தார் என்றும், அதனால் கீழே விழுந்ததாக சாட்சியம் அளித்துள்ளார் என்றும், அவ்வாறான சங்கதிகளை போலீஸ் விசாரணையிலோ, புகார் வாக்குமூலத்திலோ குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வழக்கினை சரிவர விசாரணை செய்யாமல் பொய்யாக குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1 ,2 எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. வழக்கினை விரைவாக முடிக்க வேண்டும் என்பதால் எதிரிகள் மீது போடப்பட்ட பொய்யான வழக்கு என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிவுற்றது.**

**மறு விசாரணை -இல்லை**

S/d xxxx

Typewritten to my dictation in open court read over to the witness in tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

S/d xxxx
District Munsif-cum
Judicial Magistrate,
Pallavaram.